கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 396/2015**

திருமதி. லட்சுமி (P.W.–2) **14.3.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. சாட்சி சான்றானம் ரெண்டிற்குரிய உரிமை ஆவணம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. சாட்சி சான்றானம் ரெண்டிற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி. தாவா சொத்திற்கு அருகில் என்னுடைய நிலம் உள்ளதால் அதை தாக்கல் செய்துள்ளேன். சாட்சி சான்றாவணம் X –3 க்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி. வாதிகள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். அது என்ன வீடு என்றால் சிறிய ஓட்டு வீடு. அதில் இரண்டு அறைகளும் ஒரு ஹால் உள்ளது. அந்த வீட்டுக்கு வாதிகள் பெயரில் பட்டா உள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்தை பொறுத்து வாதிகள் பெயரில் அடங்கல் கணக்கு உள்ளதா என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதிகள் வீட்டிற்கு அருகில் வசித்து வருவதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாங்கள் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. மேலே சொன்ன வீட்டிற்கு வாதிகள் வரி ரசீது செலுத்துகிறார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் வாதிகள் சுவாதினத்தில் இல்லை. அவர்கள் ஆடு, மாடு, கோழி, நாய் எதுவும் தாவா சொத்தில் வளர்க்கவில்லை. வாதியின் வீட்டிற்கு அருகே வசித்து வருவதால் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் சட்டவிரோதமாக குடியேறி உள்ளார்கள் என்ற விவரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2007 ஆம் வருடம் பிரச்சனை ஏற்பட்டு வாதிகள் மீது புகார் கொடுக்கப்பட்டு அதில் வாதிகள் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். முதலில் விசாரணை சாட்சியம் பொய் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை தெரியாது. ருக்மணி என்னுடன் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். வாதிகள் தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. 30 வருடம் ஆக அருகில் வசித்து வருகிறார்கள். வாதிகள் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த பொது அதிகார ஆவண விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்துக்களை கிரைய ஆவணம் ஏற்படுத்தி உள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள நிலத்தை ஏழாம், ஐந்தாம் பிரதிவாதி தான் கிரயம் பெற்று சுவாதீன அனுபவத்தில் உள்ளார். வாதிகள் சுவாதினத்தில் இல்லை என்றால் விவசாயம் செய்யவில்லை என்றால் சரி. நாய், கோழி மற்றவர்களை வைத்து வளர்த்து வருகிறார். வாதிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.03.14 03:17:42 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.